<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2021ம் ஆண்டு ஜுலை மாதம் 30ஆம் நாள் (30.07.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: த. நாராயணன், பி.எஸ்.சி., எம்.பி.ஏ.,
தனி அலுவலர்.

1) கொடைக்கானல் நகராட்சிக்கு 2021–2022ம் ஆண்டிற்கு எழுது பொருட்கள் கொள்முதல் செய்து அலுவலக இருப்பில் வைக்கப்பட வேண்டியுள்ளது. எழுது பொருட்களின் தேவைப் பட்டியலில் காணும் விபரத்திற்கு உரிய எழுது பொருட்களை அரசாணை நிலை எண்.330, தொழில்துறை, நாள்.03.05.1991ன் படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக மாவட்ட அச்சக சேவைத் தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனங்களில் கொள்முதல் செய்து கொள்ள அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை நகராட்சி நிர்வாக இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்களின் கடிதம் C.No.29968/2012/OP3, நாள்.30.12.2013ன்படி நகராட்சிக்கு தேவையான அனைத்துவிதமான பொருட்களையும் அரசு கூட்டுறவு நிறுவனங்களில் கொள்முதல் செய்து கொள்ள பரிந்துரை செய்துள்ளார்கள்.

மேற்காணும் அனுமதிக்கிணங்க 2021–2022ம் ஆண்டிற்கு தேவையான காகிதங்கள், கணினி அச்சு இயந்திரங்களுக்கான டோணர்கள், பதிவேடுகள், கோப்பு மூடுதாள், அளவுப் புத்தகங்கள் உள்ளிட்டவை இவ்வருடத்திற்கு இதுவரை வாங்கப்படவில்லை. இப்பொருட்களுக்கான இருப்பும் இல்லை. தேவையான எழுது பொருட்களை மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்து கொள்வதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/–ஐ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அரசாணை நிலை எண்.330, தொழில்துறை, நாள்.03.05.1991ன்படி விலைப்புள்ளி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோராமல் அரசு கூட்டுறவு நிறுவனமான மாவட்ட அச்சக சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனத்திடமிருந்து இந்நகராட்சிக்கு 2021–2022ம் ஆண்டிற்கு தேவையான காகிதங்கள், கணினி அச்சு இயந்திரங்களுக்கான டோனர்கள், பதிவேடுகள், கோப்பு மூடுதாள்கள், அளவு புத்தகங்கள் உள்ளிட்ட எழுது பொருட்களை இவ்வருடத்திற்கு இதுவரை வாங்கப்படவில்லை. இப்பொருட்களை கொள்முதல் செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,00,000/–ஐ (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.979/2021/பி3)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1064, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் அவர்களின் 2.7.2021ம் தேதிய கடிதத்தில், கீழ்கண்ட விபரப்படியான வழக்குகளுக்கு கூடுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதற்கு கூடுதல் கட்டணம் ஒரு வழக்கிற்கு ரூ.5000/– வீதம் 5 வழக்குகளுக்கு ரூ.25,000/– வழங்க கோரி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. ஏற்கனவே இவ்வழக்குகளுக்கு Vakkalath மற்றும் Counter Affidavit சமர்ப்பித்தும், வழக்கு கட்டணம் வழங்கப்பட்டு விட்டது. இந்நிலையில் கூடுதல் அறிக்கை தயார் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதற்கு கட்டணம் ரூ.25,000/–ஐ வழக்கறிஞருக்கு வழங்க அனுமதி கோரியும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறத.

| வ.எண் | வழக்கு எண் | பெயர் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | WP(MD)No. 4176 of 2021 | ஆர்.ஜி.பத்மநாபன் | 5000/– |
| 2. | WP(MD)No. 7596 of 2020 | ஜி.ரமேஷ் | 5000/– |
| 3. | WP(MD)No. 7598 of 2020 | ஆர்.எழில்வதனி | 5000/– |
| 4. | WP(MD)No. 7611 of 2020 | ஜே.சுதாகர் | 5000/– |
| 5. | WP(MD)No. 15532 of 2020 | ஜி.ரமேஷ் | 5000/– |
| | | மொத்தம் | 25000/– |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.420/2014/எப்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1065, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) சென்னை உயர்நீதிமன்ற உத்தவு வழக்கு எண். WP(MD) 14189-2020 நாள்.28.6.2021 ல் கொடைக்கானல் நகரம், வார்டு D, பிளாக் 18, நகரளவு எண். 55ல் அமைந்துள்ள 1 ஏக்கர் 72 சென்ட் நிலத்தில் நுழைவு வாயில் கதவு, கம்பி வேலி மற்றும் பெயர் பலகை அமைத்திட பொது நிதியின் மூலம் 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணி நீதிமன்ற உத்தரவினை செயல்படுத்திட வேண்டியுள்ள பணி என்பதினால் உடனடியாக இப்பணியினை செய்து முடித்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1066, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சியின் புதிய பொலிரோ வாகனம் TN 57 BU 9623 இதுவரை 80,000 கி.மீட்டருக்கு மேல் ஓடியுள்ளது. எனவே, இவ்வாகனத்தின் ஆயில் சர்வீஸ் மற்றும் இதர மராமத்து சர்வீஸ் பணிகளை வாகனத்தின் உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற மதுரை, கப்பலூர், AMPL பணிமனையில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1,10,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும் ) ஆகும்.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (கோப்பு ந.க.எண். 3564/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1067, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணிக்கு குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்பட்டு வரும் TN 57 AU 3862 டிப்பர் லாரி மற்றும் TN 57 BZ 9226, TN 57 BZ 9234 ஆகிய இரண்டு பொலிரோ பிக்அப் வாகனங்களின் டயர்கள் அனைத்தும் தேய்ந்து வாகனத்தை இயக்குவதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. இந்நகராட்சி மலைப்பிரதேசமாக இருப்பதாலும், சாலைகள் ஏற்ற இறக்கமாக உள்ளதாலும் தற்சமயம் தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளதாலும், கொரோனா பெருந்தொற்று பரவல் உள்ள நிலையில் நகர் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி உரக்கிடங்கில் சேர்ப்பிக்க வேண்டியுள்ளதால் துப்புரவுப் பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கண்ட மூன்று வாகனங்களில் TN 57 AU 3862 டிப்பர் வாகனத்திற்கு ஆறு டயர்களும், TN 57 BZ 9226, TN 57 BZ 9234 வாகனங்களுக்கு, வாகனம் 1க்கு நான்கு டயர்கள் வீதம் எட்டு டயர்களும் மொத்தம் மூன்று வாகனங்களுக்கு 14 புதிய டயர்கள் வாங்கிக்கொள்வதற்கும் MRF நிறுவனத்திற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் விலைப்புள்ளி தொகை ரூ.1,21,846/– (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்தி ஓராயிரத்து என்னூற்றி நாற்பத்தி ஆறு மட்டும்) பட்டியல் தொகை வரப்பட்டுள்ளது. மேற்கண்ட MRF டயர் திண்டுக்கல் நிறுவனத்திடமிருந்து 14 டயர்கள் புதியதாக வாங்கிக் கொள்வதற்கும் அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.323/2021/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1068, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

6) கொடைக்கானல் நகராட்சி ரைபிள் ரேஞ்ச் பகுதியில் போதுமான குடிநீர் பகிர்மான குழாய்கள் விஸ்தரிப்பு செய்ய வேண்டியுள்ளது. தற்போது குடிநீர் இணைப்பு கோரி விண்ணப்பங்கள் வரபெற்றுள்ளன. எனவே, ரைபிள் ரேஞ்ச் சாலையில் குடிநீர் பகிர்மான குழாய்கள் விஸ்தரிப்பு செய்திட குடிநீர் நிதியின் கீழ் ரூ. 8.86 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டின்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1069, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

7) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மாவட்ட ஆட்சித் தலைவர் தங்கும் பார்க் வியு பங்கா கட்டிடமானது மழையின் காரணமாக சேதமடைந்து பழுதடைந்துள்ளது. எனவே, மேற்படி கட்டிடத்தினை மராமத்து செய்து புதுப்பிப்பதற்கு 14.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பீட்டு அட்டவணை மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்தக்காரரின் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீடு விகிதத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | கொடைக்கானல் நகராட்சியின் பார்க் வியு பங்காவினை மராமத்து செய்து புதுப்பித்தல் | 9.98 | எம்.ஆர்.பிலால் இப்ராஉறிம்<br>பி. முரளி | 0.01% குறைவு<br>0.02% அதிகம் |

அலுவலக குறிப்பு. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1070, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

8) கொடைக்கானல் நகராட்சி பகுதியில் உருவாகும் காய்கறி கழிவுகள் மற்றும் உணவு கழிவுகளை சேகரித்து அம்மா உணவகத்தில் Bio-Gas உருவாக்கி அம்மா உணவகத்தில் பயன்படுத்திடலாம். இதனால் எரிவாயு செலவினம் குறையும் என்பதினால் அம்மா உணவகத்தில் Food Waste Treatment plant அமைத்திட மதிப்பீடு ரூ. 2.65 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1071, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

9) கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மாவட்ட ஆட்சியர் தங்கும் விடுதி மற்றும் ஆணையாளர் குடியிருப்பானது செண்ட் மேரிஸ் சாலையில் அமைந்துள்ளது. இப்பகுதியானது வனப்பகுதியினை ஒட்டி அமைந்துள்ளதால் இப்பகுதியில் தொலைதொடர்பு சாதனங்கள் சரியாக சமிக்ஞை (Signal) கிடைக்காமல் உள்ளது. இதனால் அவசர காலங்களில் தொலைபேசி இணைப்பு மற்றும் கைபேசியில் செய்திகள் பரிமார இயலாத சூழ்நிலையும், மின்னஞ்சல் பெற இயலாத நிலையும் உள்ளது. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் நேரடி அறிவுரையின்படி Tri Band Repeater Mobile Signal Router அமைத்திட தெரிவித்துள்ளார். எனவே, செண்ட் மேரிஸ் சாலையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மாவட்ட ஆட்சியர் தங்கும் விடுதி மற்றும் ஆணையாளர் குடியிருப்பிற்கு 2 எண்ணம் Tri Band Repeater Mobile Signal Router அமைத்திடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 65,000/– ஆகும்.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **1072, நாள். 30.07.2021.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/—த.நாராயணன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.